மறுமலர்ச்சிப் பாதையில்

மக்கள் கலைகள் V

# கண்ணகி அம்மன் கஞ்சி வார்ப்புத் தண்டற் பாட்டு

RUTNAM LIBRARY
ஊ/4



த. சண்முகசுந்தரம்

மறுமலர்ச்சிப் பாதையில்
மக்கள் கலைகள் V

# கண்ணகி அம்மன்
# குஞ்சி வார்ப்புத் தண்டல் பாட்டு

த, சண்முகசுந்தரம்

அருள் வெளியீட்டகம்
மாவை கந்தசாமி கோவிலடி
தெல்லிப்பழை
இலங்கை
30-03-83

விலை ரூபா : 3-00

உரிமை ஆக்கியோனுக்கே

MARUMALARCHI PATHAIYIL
MAKKAL KALAIKAL V

# KANNAKAI AMMAN THANDAL PATTU

EVELYN RUTNAM INSTITUTE * JAF *
LIBRARY
REFERENCE

*Folk Literature in the Path of Revival.*

KANNAKAI AMMAN
ALMS GIVING SONGS

*Songs Sung on the occasion of*
*Door to door collection of cash and kind*

BY
T. SANMUGASUNTHARAM, B. A. (CEY.) DIP-IN-ED. (CEY)

*Printers*

**Kugan Press**
Tellippalai.

*Publishers*

Arulveliettakam
Mavai Kanthasamy Kovilady
Tellippalai
Sri Lanka
30-03-83

*Price* **Rs. 3·00**

## மாவிட்டபுரம்

# வீணியவரை கண்ணகை அம்மை

# கஞ்சி வார்ப்புத் தண்டற் பாட்டு

ஈழத்தில் பல பகுதிகளிலும் கண்ணகை வழிபாடு நிலவி வந்துள்ளது. கண்ணகி கோயில் கண்ணகை அம்மை கோயிலாக மாறிப் பின்னர் அம்மன் கோயிலாக மாறிவிட்டன. 1 ஈழத்தில் வீசிய வேதாகம மறுமலர்ச்சி அலையே இதற்குக் காரணம் என்பர் ஆராய்ச்சியாளர். 2 இங்கு இடம்பெறும் மாவிட்டபுரம் வீணியவரை கண்ணகை அம்மை குளிர்ச்சித் தண்டற்பாட்டு மக்கள் இலக்கியத்தில் அடங்கும். வைகாசி விசாக நாளிலே ஆண்டுதோறும் இந்தக் கோயிலில் பொங்கல் நடைபெறும். நாட்டிலே நோய்நொடி ஏற்பட்டாலும் குளிர்ச்சி நடைபெறும். இதனைப் பொதுமக்கள் குளிர்த்தி என்பர். அம்மையார் திரு உள்ளம் குளிரக் கஞ்சி வார்த்தல் முக்கியம். தாயின் உள்ளம் குளிர்ந்தால் வெப்பம் நீங்கும்; வரட்சி போகும்; மழை பெய்யும்; நோய் அகலும்; நாட்டிலே குளிர்மை ஏற்படும். இவை அக்கால மக்களின் நம்பிக்கை. இப்பொழுதும் சித்திரைக் கஞ்சி வார்த்தல், குளிர்ச்சி, பொங்கல் என்பன நடைபெறுகின்றன இக் கோயிலில்.

அந்தக் காலத்தில் பொங்கலுக்கு முதல் நாள் இக்கோயிலைச் சேர்ந்த தலையாரியார் சிறுவர்களையும் அழைத்துக்கொண்டு புறப்படுவார். தெருத்தெருவாக

இந்தப் பாடல்களை அவரும் அவர் குழாத்தினரும் படிப்பார். ஊர் மக்கள் பொங்கலுக்கு வேண்டிய பச்சை அரிசி, 3 காசு, வெல்லம், பழம், பாக்கு, தேங்காய் போன்றவற்றைக் கொடுப்பர். பொங்கச் செல்கின்ற மக்களுக்கு இப்படியான பாடல் அழைப்பாக அமையும். இந்தக் கோயில் இப்போது மாவிட்டபுரம் வீணியவரை சிறி இராச இராசேசுவரி அம்மாள் கோயில் என்ற பெயரில் நன்கு நடைபெற்று வருகின்றது; ஆனால் இங்கு கண்ணகைக்குச் சிலையும் வைத்துப் பூசை செய்யப்படுகின்றது. இதனை அதே கோயில் குடமுழுக்கு மலரிலே காணலாம்.

" 1969ம் ஆண்டு ஆவணி மாதம் 27ம் திகதி பகல் 1 மணிக்கு கோயில் நிருத்த மண்டபம் தானே விழுந்தது. இது கண்டு அயலவர்கள் அதிர்ச்சியும் கவலையும் கொண்டனர். உடனடியாக நான் நமது ஊரவரும் வேதாகமங்களில் பாண்டித்தியமும் தெளிந்த அறிவும் ஆராய்ச்சி அனுபவமும் மிக்க வேதாகம பூஷணம் பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் அவர்களை அணுகி அவரை அழைத்து வந்து கோவிலைக் காட்டினேன். பொதுமக்கள் முன்னிலையில் இது தொடர்பாக அவர் விளக்கம் அளித்தார். தாமதமின்றி கோவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் ஆலோசனை சொன்னார்.

இக்கட்டத்தில் இங்கு பலர் மத்தியிலும் பிரச்சனையாக ஒரு கேள்வி எழுந்தது. முன்னர் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி கோவிலாக இருந்த இக்கோவில் பின்னாளில் கண்ணகை அம்மன் கோவிலாக வழங்கப்பட்டு வந்துள்ளதுடன் கண்ணகை உருவச்சிலை வழிபாடு முக்கியமானதுமாக இருந்துவந்துள்ளது. இதனால் மீண்டும் இங்கே ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளைப் பிரதிட்டை செய்யமுடியுமா என்பதுதான் பிரச்சனை.

இது தொடர்பாக இலங்கையிலும் இந்தியாவிலும் இயைந்த பாண்டித்தியம் மிக்க அச்சுவேலி சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக் குருக்களை அடைந்து இப் பிரச்ச னைக்குத் தீர்வு காணும்படி நானும் வேதாகம பூஷ ணம் பாலசுந்தரக் குருக்களும் கேட்டோம்.

அவர் ஸ்ரீ இராஜராஜேஸ்வரியைப் ப்ரதிட்டை செய்யுமாறு கூறியதுடன் இதுவரை ஆராதிக்கப் பட்ட கண்ணகை அம்மனைத் தனியானதோர் கோவில் கட்டி அங்கு வைக்கும்படியும் அக்கோவிலிலும் வரு ணன், வாயு திசைகளுக்கிடையில் இருக்க வேண்டும் என்றும் ஆலோசனை கூறினார். அவர் கூறியபடிதான் கண்ணகைக்கு ஆலயம் தற்போது நிறுவப்பட்டுள் ளது. இதுபோன்ற அமைப்புள்ள ஸ்ரீராஜராஜேஸ்வரி கோவில் அமைப்பினை அச்சுவேலி சன்னதி வீதியில் இடைக்காடு என்னும் இடத்தில் காணமுடியும் என் றும் குருக்கள் அவர்களை சான்றும் தந்தார்கள்.

"என் உரை"

**பிரம்மஸ்ரீ அ. துரைச்சாமிஐயர்**

பாழ்ப்பாணம், மாவிட்டபுரம் வீணியவளை

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள்

கும்பாபிடேக மலர் — 78

பழைய கண்ணகையார் கோயில் பின்னர் அம் பாள் கோயிலாக மாறினது எனவும் கொள்ளலாம். எது எப்படியிருப்பினும் கண்ணகிக்குரிய இடம் இக் கோயிலில் கொடுத்திருப்பது மகிழ்ச்சிக்குரிய அலுவல். பண்டைத் தமிழ் மக்களின் பத்தினிக் கடவுள் வழி பாடு இங்கு உரிய முறைப்படி நடக்கின்றது. இந்தக் கோயிலில் கண்ணகி காதை ஏடு ஒன்று இருந்தா கத் தெரிகின்றது. இப்படியான ஏடுகள் பலவும்

ஈழத்தின் பல பகுதிகளிலும் இருந்தன 4. இவை செல்லுக்கு இரையாகின என்பர் இப்பகுதி முதிய வர். நிற்க, இங்ஙனம் திரட்டப்பட்ட பொருள்கள் யாவும் கோயிலை வந்தடையும். அங்கு பெரியதொரு பந்தல் போடப்படும். வைகாசிப் பொங்கல், படை யல் ஒருபக்கம். கஞ்சி வார்த்தல் ஒருபக்கம். இவை சமய அடிப்படையிலும் சரி, சமுதாய அடிப்படையி லும்சரி முக்கியமான இடத்தைப் பெறும். மக்கள் சாதி அடிப்படையை மறந்து ஒன்று சேருவர். பந்தல்கால் நடுதல், விறகு தேடுதல், வெள்ளை கட் டுதல், சோடித்தல், அண்டாவைத்தல் எல்லாவற் றிற்கும் ஒவ்வொரு குலத்தவரே பொறுப்பாக இருந் தனர். இருந்தும் கிராம மக்கள் எல்லோரும் தம் வேற்றுமையை மறந்து ஒற்றுமையாக இயங்குவர். உள்ளவர் இல்லாதவர் எல்லோரும் அன்னையின் முன் னிலையில் சரிசமன் என்ற கருத்து நிலவியது. மேலும் உள்ளவர் உளம் உவந்து கொடுப்பதை இல்லாதவர் உவந்து ஏற்றுக்கொள்வர். கொடுப்பதும் தனி இன் பம். வாங்குவதும் தனி இன்பம். கிராமத்தின் ஒற் றுமைக்கு இந்தக் கஞ்சிவார்ப்புச் சிறந்த எடுத்துக் காட்டு. கஞ்சி வார்ப்புத் தொடங்கினால் நாள் முழு வதும் “ இல்லை ” என்று கூறாமல் வருபவர் எல்லோ ருக்கும் உணவு வழங்கப்படும். ஒரு பக்கத்தில் பொங்கியவர்கள் தமது பானைகளில் இருந்து பொங் கலை மற்றவர்களுக்கு வழங்குவர். இதனாலே தான் “ பொங்கியவனிலும் பார்க்கத் தண்டியவனுக்குப் புக்கை கூட ” என்ற கூற்று எழுந்தது.

நன்றி :

இங்கு இடம்பெறுகின்ற இனிய பாடலை எனக் குப் பாடிக் காட்டியவர் தெல்லிப்பழை மகாசனக் கல்லூரி முன்னைநாள் ஆசிரியர் திரு. கி. ஆறுமுகம்;

இவர் இக்கோயிலுக்கு அருகாமையில் வாழ்ந்தவர்; அம்மையை அன்போடு வணங்குபவர்; இவர் என்னுடன் கற்பித்தவர்; நல்லாசிரியராகப் பல ஆண்டு கடமை புரிந்தவர். பாடல்களைச் சீராக்கி எழுதித் தந்தவர் என் அருமைத் தந்தையார் திரு. ஆ. தம்புச் சட்டம்பியார். விளக்கம் பலவும் தந்தவரும் இவரே. மறைந்த இந்தப் பெரியார் இருவருக்கும் என் உளம் நிறைந்த நன்றி. மறைந்துபோன இப் பாடலை அச்சேற்றுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். ஈழத்துத் தமிழகம் பழமை வாய்ந்தது; தனிப் பெருமை வாய்ந்தது. இதனை மேலும் வலுப்பெறச் செய்ய இப்படியான மக்கள் கலைகள் பெரும் உதவியாக இருக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அதற்கு வழிகோல இப் பாடல்கள் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த நூலை அச்சிட்டுத்தந்த "குகன்" அச்சகத்தார்க்கு என் நன்றி உரித்தாகுக. இந்த அச்சக முகாமையாளர் திரு. சி. நவரத்தினம் அம்பாளின் அடிமை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கந்தசாமி கோவிலடி, த. சண்முகசுந்தரம்
தெல்லிப்பழை.
30-03-83

---

1. "சங்கமம்" 9-11-74
2. "நாவலர் நூற்றாண்டு விழா மலர்" பக். 94 த. சண்முகசுந்தரம்.
3. பச்சை + அரிசி = பச்சைஅரிசி, நெல்லை வேகவைத்து புழுங்கவிட்டுக் குற்றி எடுப்பது புழுங்கல் + அரிசி = புழுங்கலரிசி.
4. வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயில் மலர் பக். 64

உ

சிவமயம்

மாவிட்டபுரம் வீணியவரை

## கண்ணகி அம்மை

# கஞ்சி வார்ப்புத் தண்டற் பாட்டு

### காப்பு

கண்ணகியாள் கஞ்சிவார்ப்புத் தண்டற் கவிபாட
எண்ணும் விநாயகனே எங்காப்பு — மண்ணில்வரு
துன்பத் தொடரறுமே தூயவின்பம் சேருமே
நன்பதையில் என்றென்றுந் தான்.

### நூல்

குஞ்சரியின் புத்திரனைத் தொழுது நாமே
கஞ்சி வார்ப்புத் தண்டல் செய்ய வாரோம்
மூத்த சிவன் மைந்தனைப் பாடியே நாமே
வீதியெங்கும் தண்டல் செய்ய வாரோம்
பரமசிவனருகி லிருந்தெல்லோ எங்கள் தாய்
அருண் மழை பொழிந்தெம்மைக் காத்திடுவாள்
முத்துக் குமரனை மடியில் வைத்தெல்லோ
மூவுலகும் காத்தருள் செய்வாளெங் கள்தாய்
அருண் மழை பொழிந்தெம்மைக் காத்திடுவாள்
மருவுமாவை வீணியவரைக் கண்ணகியாம் தாய். 1

துன்பம் போக்கும் அம்மன் கஞ்சிக்கு
இன்பம் பெருக வந்து பாடிப்பாடி
பச்சை அரிசியும் பழம்பாக்கு அடையும்
இச்சையுட னெடுத்து வழங்கு வீரே
பாங்கான நல்ல பருப்புடனே வெல்லம்
தேங்காயும் பணமும் மனமுவந்து தாரீரே.
பேரான எங்கள் வீணியவரை அம்மன்
பேரருளைப் பெற்றுய்ய எல்லீரும் வந்து
தாரான உதவிகளைத் தந்தின்பம் பெறுவீர்
தரணிமகிழ் மாவைநகர் வீணியவரைத் தாயாம்
பூரணியின் பொற்பாதம் தொழுது நின்றேமே. 2

மங்கள நாயகியின் புன்னகை யிலே
தங்குமருள் பொங்கியெழும் புண்ணியர்களே
கொதிக்குமுள்ளம் குளிர்ந்துவிடும் குளிர்த்தியைச் செய்ய
கதித்தெழுந்து வாருங்களேன் கண்ணகியாள் வாசல்
பட்டினத்து மங்கையெல்லோ கண்ணகிப் பாவை
தொட்டுப் பாதம் சூட்டவாரீர் தொண்டருள்ளீரே
சீறும் வினைத்தொடரைச் சாடிடுவாள் அம்மை
மாறும் பிறவியுமே கஞ்சிவார்ப்புச் செய்ய
கூறுபுகழ் மாவைநகர் வீணியவரைத் தாயாள்
வீறுபுகழ் பாடிப்பாடிச் சேர வாருமே. 3

மாநாய்க்கன் புதல்வியெல்லோ கண்ணகித் தாயாள்
நாளும் காத்திடுவாள் அமிர்தவல்லித் தாயாள்
சாநாளும் வாழுநாளும் கைகொடுக்கும் கருணையாள்
போநாளில் புகல்தருவாள் கண்ணகித் தாயாள்
நீலிமனம் நொந்தெல்லோ நீணிலத்து வந்தாள்
சூலிமனம் குளிர்ந்துவிட்டால் சூழ்வினைகள் போமே
கொடும்பாடு இழைத்த மன்னன் கொடியவினை போக்க
வடிவோடு வந்தாளே கண்ணகித் தாயாள்
பட்டதுன்பம் விட்டுவிடும் கஞ்சிவார்ப்புச் செய்ய
தொட்டதெல்லாம் துளிர்த்துவிடும் சேர வாருமே. 4

சாத்துவனின் மகனெல்லோ கலைக்கேள்வன் கோவலனர்
ஏத்துபுகழ் கோவலனை கைப்பிடித்தாள் கண்ணகியாள்
கற்பிருந்த கண்ணகியாள் வீட்டரசி ஆனளே
சொற்பிரியா இல்லறத்தைச்சீராகக் காக்கையிலே
மலர்க்குழலி மின்னம்மை மாதவியாள் கலையழகில்
குலமகனும் கோவலனர் மயங்கிவிட்டான் ஊழ்
விணையால்
தென்னவனின் பழிதுடைக்க தேன்மொழியைச்
சேர்ந்தானே
மன்னன் அறங்காக்க மாதவியாள் சேர்ந்தாளே
அழியா அழகுடையாள் கருணை அலை எறியும்
விழியா கண்ணகியாள் இல்லுறையும் கற்பின்மிக்காள்
கற்பின்மிக்க கண்ணகியின் மனங்குளிர குளிர்த்தியைநாம்
அற்பிெனடு செய்திடவே அரும்பொருளைத் தந்
துதவீர். 5

அல்லியங் கோதையம்மை கண்ணகியைக் கோவலனர்
மெல்ல மெல்லத் தான் மறந்தார் மேலவரும்
தான் மகிழ்ந்தார்
வண்டார் பூங்குழலம்மை வனிதை மாதவிபால்
கொண்டல் போல் பொருளெல்லாம் கொடுத்து
மகிழ்ந்தானே
கொற்றவனுக் குற்றபழி குறுக்கிட்ட அதினலே
மற்றென்று மறியாத மாதவியும் கானல் வரிப்
பாடல் தனைமறந்து இசைக்கையிலே கோவலனும்
ஊடிப் புலனெந்து மாதவியைப் பிரிந்தானே
பிரிந்தவனைப் புரிந்தவளே கண்ணகியாம் எங்கள் தாய்
விருப்புடனே வீணியவரைக் கோயிலிலே கொலுவுற்
ருள். 6

கொலுவுற்ற கண்ணகியாள் கொண்டவனிற்
பெருந்தெய்வம்
நிலவுலகில் இல்லையெனும் வாய்மை கடைப்பிடித்து
வண்டுறங்கு கூந்தலுடன் வளநாடு நீத்தகன்று
ஆண்டகையாம் கணவனுடன் கூடல்நகர் சேர்ந்தாளே
தான்தனியக் கோவலனுர் தனிச்சிலம்பு விலைகூற
நஞ்சனைய வஞ்சநெஞ்சன் பொற்கொல்லன்
வஞ்சனையால்
மிஞ்சுபுகழ் கோவலனும் கொலைப்பட்டான் அது
கேட்டுச்
சினந்தெழுந்த கண்ணகியும் நினைந்தழுது அறங்காக்க
மன்னன்பால் சென்ருளே மனங்குளிரக்
கஞ்சிவார்ப்போம். 7

கஞ்சிவார்க்க வாருங்கள் கண்ணகியாள் மனங்குளிர
தஞ்சமென அவள்பாதம் தொழுதுய்ய வாருங்கள்
பாண்டியனின் பழிதீர்க்க வந்தவளே கண்ணகியார்
தொண்டுசெய்தால் அவள்சீற்றம் தணிந்திடுமே
வாருங்கள்
கொற்றவன்முன் வந்துநின்ற கற்பிருந்த
தெய்வமன்னுர்
பொற்ருெடியின் நிலைகண்டான் கொற்றவனும்
வெய்துயிர்த்து
விரிகூந்தல் விழிநீரும் தனிச்சிலம்பும் கண்டன்ருே
பார்வேந்தன் மனம்பதைத்தான் விதிகூட்ட
அவ்வளவின்
தேர்வேந்தன் தோற்றுவிட்டான் திருவாரூர்க்
கூடலிலே
பாருள்ளீர் வாருங்கள் பாவையிவள் சினமாற. 8

சினங்கொண்ட நாயகியின் சீற்றமது கொழுந்துவிட
மனங்கொண்ட மாதேவி மருவார் குலமழியத்
தீத்திறமே படர்கவென தீக்கடவுள் தீக்கொழுவி
வீதிமலி கூடலையே வேதித்தான் கண்ணகியும்
கூடல்விட்டு வஞ்சிநகர் தஞ்சமெனச் சென்றிட்டாள்
பாடலமை கலைக்கோயில் கற்கோயில் பெற்றிட்டாள்
தமிழிச்சி கண்ணகியாள் தமிழ்நாடு ஒப்பற்று
இமிழ்கடல்சூழ் வையத்து தனித்துவமும் பெற்றதுவே
கடப்பாடு மறவாமல் கண்ணகியாள் மனங்குளிர
கடல்போல வாருங்கள் குளிர்த்தியை நாம்
செய்வோமே. 9

கருணை கருக்கொண்ட உத்தமியாள் கண்ணகிக்கு
மருவார் குழல்மடவீர் கஞ்சிவார்க்க வாருங்கள்
எல்லா உயிர்கட்கும் கண்மணியாம் கண்மணிக்கு
கல்லார் புயமுடையீர் கஞ்சிவார்க்க வாருங்கள்
பொன்னூஞ்சல் கட்டிப் பொலிந்தசெழும்
தாதிறைத்து
அன்னக் கிளிமொழியார் அங்கிருந்து யாழிசைப்ப
பணியாரம் பொங்கல் கனிவகையும் தான்படைத்து
கர்ப்பூரப் பேரொளியில் கண்ணகியைக்
கொலுவிருத்தி
ஈர்ப்புறவே நெஞ்சம் கஞ்சிவார்க்க வாருங்கள். 10

மாவைநகர் வீணியவரை வந்தவளே ஓலம்
மதுரைவிட்டு மாவைநகர் வந்தவளே ஓலம்
கற்புக் கடம்பூண்ட கண்ணகியே ஓலம்
கண்ணகிக்கு வாழ்வளிக்கும் வயிணவியே ஓலம்
வாழுநெறி வகைதந்த கண்ணகியே ஓலம்
குலமக்கள் நிறை காக்கும் பராபரையே ஓலம்
நோய்நொடிகள் நீக்கிடுவாய் ஓலம் ஓலம்
பாலகர்க்கு அருள்புரிவாய் ஓலம் ஓலம்
வீணியவரை வீற்றிருப்பாய் ஓலம் ஓலம்
மாவைநகர் மக்களுக்கு வாழ்வளிப்பாய் ஓலம். 11

EVELYN RUT INSTITUTE
JAFFNA
REFERENCE
LIBRARY

## இந்த நூலாசிரியரின் ஏனைய நூல்

வரலாற்று நாடகம்

- வாழ்வு பெற்ற வல்லி
- இலங்கை சாகித்திய மண்டலப் பரிசுபெற்றது
- பூதத்தம்பி
- இறுதி மூச்சு

கலை

- கலையும் மரபும்
- இசையும் மரபும்
- யாழ்ப்பாணத்து இசை வேளாளர்

நாவல்

- மீனாட்சி

மறுமலர்ச்சிப் பாதையில் மக்கள் கலை

- மாருதப்புரவல்லி கப்பற் பாட்டு
- இறக்கணியவளை குருநாதர் மான்மியம்
- நாய்ச்சிமார் மான்மியம்
- மாவை முருகன் காவடிப் பாட்டு

வாழ்க்கை வரலாறு

- கலையருவி கணபதிப்பிள்ளை
- இலங்கை சாகித்திய மண்டலப் பரிசுபெற்றது

குகன் அச்சகம் - தெல்லிப்பழை